சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 326 /அ2/2023,     நாள்.   18.01.2023

பொருள்: பள்ளிக் கல்வி அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள்களின் பணிப்பதிவேடுகள் (SR) ஈட்டிய விடுப்பு, மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு மற்றும் இதர பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதிவு செய்தல் கால நீட்டிப்பு – கணக்கில் உள்ள விடுப்பு விபரங்களை பதிவேற்றம் செய்தல்- IFHRMS Employeee IDஐ பதிவேற்றம் செய்தல்- அறிவுரைகள் வழங்குதல்- சார்ந்து.

பார்வை: பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.043443/பிடி1/இ2/ 2022 நாள். 10.01.2023.

.

இணைப்பு: பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறை கடிதம்.

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகளின்படி, அரசு/அரசு நிதியுதவிபெறும் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்களது பணிப்பதிவேடுகளில் ஈட்டிய விடுப்பு, மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டிய விடுப்பு மற்றும் இதர பதிவுகள் நாளது தேதிவரை மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்திட அறிவுரை வழங்கப்பட்டது. ஆனால் இப்பணி முழுமையாக நிறைவு பெறாத நிலை உள்ளதால் இப்பணியை 21.01.2023 வரை இப்பணியினை மேற்கொள்ள கால அளவு நீட்டிப்பு வழங்கப்படுகிறது. 21.01.2023 அன்று இதற்கான சிறப்பு முகாம் சம்பந்தப்பட்ட பள்ளிகளில் அலுவலகங்களில் நடைபெறும். அதற்குப்பிறகு கால அவகாசம் வழங்கப்பட மாட்டாது என்பதால் ஆசிரியர்/தலைமையாசிரியர்கள் சம்மந்தப்பட்ட பள்ளிகள்/அலுவலகங்களுக்குச் சென்று பணிப் பதிவேட்டிலுள்ள பதிவுகளை சரிப்பார்த்துகொள்ள அறிவுறுத்தப்பட வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் தங்கள் அலுவலக ஆளுகைக்கட்பட்ட பள்ளிகள் மற்றும் அலுவலகங்கள் இப்பணியினை மேற்கொள்ள அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்/ வட்டாரக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

ஒம்/-

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம
3. அனைத்து உயர்நிலை/மேல்நிலை/அரசு/ அரசுஉதவிபெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்.
4. அ3,அ4, அ1இஆ1,ஆ2, ஆ3,ஆ5 பிரிவு எழுத்தர் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைகாகவும் அனுப்பப்படுகிறது.

நகல்

1. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநரகம், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.